DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 2 /2019**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | பழனி |
| Father's / Husband's Name | : | சுப்பிரமணி |
| Age | : | 59 |
| Religion | : | இந்து |
| Calling | : | முன்னால் ராணுவ வீரர் |
| Caste | : | வன்னியர் |
| Village | : | பெல்லியப்பப நகர் |
| Date | : | 10.03.2020.. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதைப் படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். 05.10.2012 தேதியில் என் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் எஸ் ஆர் ஓ நகல் **வா.சா.ஆ.1.** 05.10.2012 தேதியில் என் மனைவியான 2ம் வாதி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் எஸ் ஆர் ஓ நகல் **வா.சா.ஆ.2.** 15.04.2013 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3.** ஓ எஸ் நம்பர் 7/2018 வழக்கில் எனக்கு சார்வு செய்யப்பட்ட உறுத்துக்கட்டளை மனு நகல் மற்றும் நீதிமன்ற அழைப்பாணைகள் **வா.சா.ஆ.4 வரிசை**. 30.11.2018 தேதியில் பிரதிவாதிகளுக்கு நாங்கள் அனுப்பிய வழக்கு அறிவிப்பு நகல் வா.சா.ஆ.5 அதனை பிரதிவாதிகள் பெற்றுகொள்ளாமல் திரும்பி வந்த அஞ்சல் கவர்கள் வா.சா.ஆ.6. பிராது படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**